ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
Department of Examinations, Sri Lanka
NATIONAL EVALUATION AND TESTING SERVICE

පැලවත්ත, බත්තරමුල්ල.
பெலவத்தை, பத்தரமுல்ல
Pelawatta, Battaramulla.

මගේ අංකය / எமது இல / My No } 6/5/2021
ඔබේ අංකය / உமது இல / Your No } ..................
දිනය / திகதி / Date } 2022.03.14

දුරකථන / தொலைபேசி / Telephones } 2786200, 2784201, 2785202, 2784203, 2784204, 2786205, 2784206.
ෆැක්ස් / பெக்ஸ் / Fax } 011-2785220
තැපැල් ලිපිනය / அஞ்சல் முகவரி / POSTAL ADDRESS — තැ.පෙ. 1503, කොළඹ / த.பெ. 1503 கொழும்பு / P.O.Box 1503 Colombo
අන්තර්ජාල ලිපිනය / இணையதள முகவரி / Internet Address } www.doenets.lk
E-mail : examd@sltnet.lk

அதிபர்களுக்கு,

## பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடத்தப்படும் பரீட்சை – 2021(2022)

பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயனர்பெயர் (username), கடவுச்சொல் (password) என்பவற்றைப் பயன்படுத்தி உங்கள் பாடசாலையின் பெறுபேற்று ஆவணத்தை பதிவிறக்கம் செய்து அச்சுப்பிரதி செய்து கொள்வதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

இவற்றுக்கு மேலதிகமாக மேற்படி பரீட்சைக்கு தங்கள் பாடசாலை மூலம் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளன. இப்பெறுபேறுகளைக் குறித்த பரீட்சார்த்திகள் அறிந்து கொள்வதற்கு இடமளிக்கவும். இப்பெறுபேற்று அட்டவணையின் பிரதி மீள வழங்கப்படமாட்டாதாகையால் இதனைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும்.

02. பிரபல பாடசாலைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்கும் அவ்வவ் மாவட்டங்களுக்குரிய வெட்டுப்புள்ளி மட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி தகுதி பெற்ற பரீட்சார்த்தியின் பெயருக்கு எதிரே **'QUALIFIED'** எனவும், தகுதிபெறாத பரீட்சார்த்தியின் பெயருக்கு எதிரே மூன்று கோடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கும் மேலதிகமாக உதவிப்பணம் பெறுவதற்குத் தகுதிபெற்ற பரீட்சார்த்திகளின் பெயருக்கு எதிரேயுள்ள வருமான நிரலில் **'BELOW'** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான பரீட்சார்த்திகளுக்கு மட்டும் உதவிப்பணம் பெறுவதற்கு உரிய படிவத்தைப் பூர்த்திசெய்து (B படிவம்) வலயக் கல்வி அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

03. பிரபல பாடசாலையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி மட்டம் அல்லது அதற்கும் மேலதிக புள்ளிகள் பெற்றுக்கொண்ட, **'QUALIFIED'** எனக் குறிப்பிடப்பட்ட பரீட்சார்த்திகள் மட்டுமே விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும். அவ்விண்ணப்பப்படிவங்கள் குறித்த மாணவன்/மாணவி கல்வி கற்கும் பாடசாலை அமைந்துள்ள வலயத்தின் பணிப்பாளரினூடாக பத்தரமுல்ல, 'இசுருபாய', கல்வி அமைச்சின் பாடசாலை நடவடிக்கை கிளைக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

04. **அமைச்சரவை/19/2354/127/064 இலக்கமும் 2019.09.11 ஆம் திகதியுமுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி விசேட தேவைகளையுடைய 250 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் ஒதுக்கப்பட்டுள்ளதுடன்.** அம்மாணவர்களைத் தெரிவு செய்யும்போது பின்வரும் செயன்முறை பின்பற்றப்பட்டுள்ளது.

i) விசேட தேவையுடையவர்களாய் இருந்தாலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் மாவட்ட மட்ட குறைந்தபட்ச வெட்டுப்புள்ளி அல்லது அதற்குக் கூடிய புள்ளியைப் பெற்றிருப்பின் சாதாரண முறையின்கீழ் புலமைப்பரிசில் உதவிப்பணம் பெறுவதற்கும் பிரபல பாடசாலையொன்றுக்கு விண்ணப்பிப்பதற்கும் உரித்துடையவர்கள் ஆவர்.

ii) விசேட தேவையுடைய, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் குறித்த மாவட்ட வெட்டுப்புள்ளியைவிடக் குறைவான புள்ளிகளைப் பெற்றிருப்பின் புலமைப்பரிசில் உதவிப்பணம் பெறுவதற்கு மட்டும் உரித்துடையவர்கள். அவ்வாறான பிள்ளைகளின் பெயருக்கு எதிரே 'QUALIFIED – SPECIAL NEEDS' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

iii) விசேட தேவைகள் உடைய, கூடிய வருமானம் பெறும் குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் பெற்ற புள்ளிகள் உரிய மாவட்ட வெட்டுப்புள்ளியைவிட கூடுதலாக அல்லது குறைவாக இருப்பின் பெயருக்கு எதிரே 'QUALIFIED – SPECIAL NEEDS' எனக் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் உதவிப்பணம் பெறுவதற்கு உரித்துடையவர்கள். எனினும் அவர்களுள் உரிய மாவட்ட வெட்டுப்புள்ளியையோ அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளையோ பெற்றிருப்பின் மட்டுமே பிரபல பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இப்பரீட்சைப் பெறுபேற்றை வெளியிடுவதற்கு முன் பல தடவைகள் நுணுக்கமாகப் பரிசீலனைகள் பல செய்யப்பட்டு பெறுபேறுகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் **தங்களது பாடசாலையில் யாரேனும் பரீட்சார்த்தியின் பெறுபேறு நம்பமுடியாத வகையில் இருக்குமாயின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் பரீட்சை ஆணையாளர்** நாயகம், **மதிப்பீட்டுக் கிளை,** (பாடசாலைப் **பரீட்சைகள்), இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல 1503, கொழும்பு** எனும் முகவரிக்கு 2022 மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அதிபராலேயே முறைப்பாடு செய்யப்பட வேண்டும். பரீட்சார்த்திகள் பலர் தொடர்பாக முறைப்பாடு செய்வதாயின் அப் பரீட்சார்த்திகளின் சுட்டெண்களையும் பெயர்களையும் பட்டியலிட்டு ஒரே உறையிலிட்டு அதனுடன் ஏனைய ஆவணங்களையும் அனுப்பி வைக்க வேண்டும். உரிய படிவம் கீழே காட்டப்பட்டுள்ளது.

- ❖ பரீட்சார்த்திகளின் சாதனைகள் தொடர்பாக வகுப்பாசிரியரினது அறிக்கை.
- ❖ பெற்றுக்கொள்ளப்பபட்ட விசேட திறமைகள் மற்றும் தேர்ச்சிகள்.

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2021(2022)**

**மேன்முறையீடு மீதான விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்தல்**

பாடசாலையின் பெயர் : .................................................. தொலைபேசி இல. ....................................

| தொடர் இலக்கம் | பரீட்சை சுட்டெண் | மாணவன் /மாணவியின் பெயர் | பெற்றுக் கொண்ட புள்ளிகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

அதிபரின் பெயர் : ..................................................................................................

திகதி : ............................................ கையொப்பம் : ...................................

(பதவி முத்திரை பதிக்கவும்)

06. மாவட்ட வெட்டுப்புள்ளி

| வெட்டு புள்ளி மட்டம் | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் |
| 01. | கொழும்பு | 152 | 149 |
| 02. | கம்பஹா | 152 | 149 |
| 03. | களுத்துறை | 152 | 149 |
| 04. | கண்டி | 152 | 149 |
| 05. | மாத்தளை | 152 | 149 |
| 06. | நுவரெலியா | 145 | 146 |
| 07. | காலி | 152 | 149 |
| 08. | மாத்தறை | 152 | 149 |
| 09. | அம்பாந்தோட்டை | 148 | 147 |
| 10. | யாழ்ப்பாணம் | - | 148 |
| 11. | கிளிநொச்சி | - | 148 |
| 12. | மன்னார் | - | 148 |
| 13. | வவுனியா | 142 | 147 |

| வெட்டு புள்ளி மட்டம் | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் |
| 14. | முல்லைத்தீவு | 140 | 147 |
| 15. | மட்டக்களப்பு | - | 147 |
| 16. | அம்பாறை | 145 | 147 |
| 17. | திருகோணமலை | 145 | 147 |
| 18. | குருநாகல் | 152 | 149 |
| 19. | புத்தளம் | 146 | 146 |
| 20. | அநுராதபுரம் | 146 | 147 |
| 21. | பொலன்னறுவை | 146 | 147 |
| 22. | பதுளை | 146 | 147 |
| 23. | மொனறாகலை | 146 | 146 |
| 24. | இரத்தினபுரி | 148 | 145 |
| 25. | கேகாலை | 152 | 149 |

எல்.எம்.டி. தர்மசேன
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

பிரதி: 1. செயலாளர், கல்வி அமைச்சு - அறிந்து கொள்வதற்காக
2. கல்விப் பணிப்பாளர், பாடசாலை நடவடிக்கைகள் கிளை, கல்வி அமைச்சு – உரிய நடவடிக்கைகளுக்காக
3. மாகாண கல்வி அமைச்சு - த.அ.கொ
4. வலயக் கல்வி அமைச்சு - த.அ.கொ